**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 30/2024** **Date:29.04.2026.**

**(PW2)- சந்திரசேகர்**

<u>**4** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி சொத்தின் நான்கு பக்க எல்கைகள் பற்றி தெரியுமா என்றால் கிழக்கு மற்றும் மேற்கு பக்க எல்கை தெரியும். கிழக்கு பக்கம் யாருடைய சொத்து என்றால் செல்லம்நாடாரின் சொத்து உள்ளது. மேற்கு பக்கம் யாருடைய சொத்து என்றால் பிரியதர்சினி சொத்து உள்ளது. கிழக்கு பக்கம் ஆசிர்வாதத்தின் சொத்து உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் பார்த்து உள்ளளேனா என்றால் தினமும் பார்க்கிறேன். தாவா எந்த திசையில் ரோடு உள்ளது என்றால் தெற்கு திசையில் உள்ளது. 10 செண்ட் சொத்தை 3 கண்டங்களாக பிரித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

2. மேற்படி 10 செண்டில் ஒரு கோவில் உள்ளது என்றால் சரியல்ல, கல்லறை தான் உள்ளது. நான் வேலை செய்கிறேன் என்றால் 30 வருடங்களாக ஓட்டுநராக உள்ளேன். நான் வெளிநாட்டில் வேலை பார்த்தேன் என்றால் சுமார் 20 முதல் 25 வருடம் வெளிநாட்டில் வேலை பார்த்தேன். எப்போது நான் ஊருக்கு திரும்பினேன் என்றால் 2023 ல் நிரந்தரமாக வந்தேன் அதற்கு முன்பு மருத்துவ சிகிச்சைக்காக இடையிடையே 6 மாதத்திற்கு ஒரு முறை வருவேன், எனது கடவுசீட்டை நான் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம், ஆனால் பழைய கடவுசீட்டுகள் எங்கு உள்ளது என்று தெரியாது. நான் சொந்த ஊருக்கு வந்த விபரங்கள் மேற்படி கடவுசீட்டில் துலங்கும் என்றால் சரிதான், ஆனால் பழைய கடவுசீட்டுகள் எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

3. வாதிகளுக்கு எத்தனை சகோதரிகள் என்றால் அது பற்றி தெரியாது. வாதிகளின் குடும்ப விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். எத்தனை சகோதரிகள் என்றால் இரண்டு சகோதரிகள் ஆவர். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளின் அப்பா மற்றும் அம்மா இறந்த தேதியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் 25 வருடங்களுக்கு முன்பு இறந்தார்கள். அவர்களது இறப்பு சான்றிதழை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. வாதிகளின் அப்பாவின் சகோதரர்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனது வீடு அமைந்துள்ள பகுதியின் பெயர் என்ன என்றால் தெற்குகள்ளிஅடைப்பு ஆகும்.

4. மேற்படி சொத்திற்கு எந்த திசையில் எனது வீடு உள்ளது என்றால் தெற்கு திசையில்

உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்திற்கு தெற்கு பக்கம் நுள்ளிவிளை என்ற ஒரு பகுதி உள்ளது என்றால் சரிதான். அதற்கு தெற்கு பக்கம் செந்தரவிளை என்ற பகுதி உள்ளது என்றால் சரியல்ல , மேற்கு பக்கம் உள்ளது. மேற்டி செந்தரவிளைக்கு தெற்கு பக்கம் கள்ளியடைப்பு உள்ளது என்றால் சரிதான். அதன் தெற்கு பக்கம் மாலவிளை என்ற பகுதி உள்ளது என்றால் சரிதான். அதற்கு தெற்கு பக்கம் பண்டாராவிளை என்றால் சரியல்ல, கல்லத்திவிளை உள்ளது.

5. கல்லத்திவிளைக்கு தெற்கு பக்கம் நான் குடியிருக்கும் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் வழக்கு சர்வே எண் சொத்திற்கும் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்குமென்றால் சரியல்ல. ஒரு கிலோ மீட்டார் தூரம் இருக்குமென்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, 3 பாதைகள் உள்ளது தூரம் குறைவான பாதையும் உள்ளது. 1,2 பிரதிவாதிகளின் அப்பாவின் அப்பாவை தெரியுமா என்றால் தெரியாது. தங்கநாடாரின் வாரிசுகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஆனால் பழக்கம் கிடையாது. தங்கநாடார் வழக்கு சர்வே எண் சொத்தில் குடியிருந்து வந்தார் என்றால் பிரியதர்சினி கிரயம் பெற்ற இடத்தில் குடியிருந்தார்.

6. தங்கநாடார் 1965 முதல் சர்வே எண் 491/19 ல் வீடு அமைத்து குடியிருந்து வந்தார் என்றால் அது பற்றி தெரியாது. தங்கநாடாரின் வீட்டிற்கு மின் இணைப்பு பெற்றிருந்தார் என்றால் அது பற்றி தெரியாது. அவர் குடியிருந்த வீடு கல்லுகூட்டம் பேரூராட்சி உட்பட்ட கதவு எண் 4/20 ஏ 1 என்றால் அது பற்றி தெரியாது. என்னை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் வாதிகள் எனது குடும்ப நண்பர்கள் அவர்கள் அழைத்து வந்தார்கள். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் கூற வழக்கறிஞர் தாக்கல் செய்தார் என்றால் நான் தான் எழுதிக்கொடுத்தேன்.

7. வாதிகளின் அப்பா மற்றும் அம்மா இறந்த தேதி தெரியாமல் அவர்கள் அடக்கம் செய்த இடம் தெரியும் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து யாருக்கு உரிமைப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் 2023 ல் தான் ஊருக்கு வந்தேன் என்றாலும் நிரந்தரமாக வெளிநாட்டில் வேலை பார்த்ததலும் வாதிகளின் பெற்றோரின் இறப்பு குறித்த எந்த விபரமும் தெரியாது என்றாலும் சரியல்ல, நான் அவர்களது இறப்பிற்கு வந்திருந்தேன். எனது பழைய கடவுசீட்டிகள் தொலைந்துவிட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானது என்றால் சரியல்ல.

8. நான் குறிப்பிடுவது போல் எந்த கல்லறையும் இல்லை என்றாலும் அது பிரதிவாதிகளின் குடும்ப வீடு இருந்த பகுதி என்றாலும் சரியல்ல. அதில் வாதிகள்

வருடம்தோறும் மாலை போடுவார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் எனது நண்பர்கள் என்பதால் பணம் பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் பெற்றோர் இறந்த தேதியை வாதிகளிடம் எப்போதாவது கேட்டுள்ளேனா என்றால் கேட்கவில்லை, ஆனால் நான் இறுதி சடங்கில் இருந்தேன்.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**